**<u>நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண் 1, நாகப்பட்டினம்</u>**

முன்னிலை : திரு.J. ஆன்ஸ்ராஜா, B.A., B.L.,
மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர், திருக்குவளை
நீதித்துறை நடுவர் எண்.1( மு.கூ.பொ), நாகப்பட்டினம்

**2026 ம் ஆண்டு ஜூன் மாதம் 09–ம் நாள், செவ்வாய்கிழமை**

**குற்றபல்வகை மனு எண்.403/2026**

ஹரிஹரன், வயது 24/25,
த/பெ. செல்வம்,
101 B காந்திபுரம், சிறுகமணி, பெட்டவாய்தலை,
ஸ்ரீரங்கம், திருச்சி மாவட்டம். . . . மனுதாரர்/வாகன உரிமையாளர்

/எதிர்/

அரசுக்காக
காவல் ஆய்வாளர்,
நகர காவல் நிலையம், நாகப்பட்டினம். எதிர்மனுதாரர்/குற்றமுறையீட்டாளர்

குற்ற எண்.245/2025
ச/பி 4(1) (aaa) TNP Act . . .

இம்மனுவானது 09.06.2026-ம் தேதியன்று என் முன்பாக இறுதி விசாரணைக்கு வரப்பெற்று மனுதாரர்/உடமையாளர் தரப்பில் வழக்கறிஞர் திருமதி. மணிஷா B.Sc., L.L.B., இஸ்மாயில் அவர்கள் முன்னிலையாகியும் எதிர்மனுதாரர்/குற்றமுறையீட்டாளர் தரப்பில் நாகப்பட்டினம், அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை 2 அவர்களும், அவர்கள் முன்னிலையாகியும், இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு வழங்கும்...

**<u>உத்தரவு</u>**

1. இம்மனுவில் மனுதாரர்/ வாகனத்தின் உரிமையாளர் ஆவார். மனுதாரருக்கு சொந்தமான வாகனம் TN 48 BD 8103 என்ற பதிவெண் கொண்ட BAJAJ PULSAR 125 BS6 என்ற இருசக்கர வாகனத்தினை 06.05.2025 ம் தேதி தனது வீட்டின் வெளியே நிறுத்திவிட்டு மறுநாள் 07.05.2025 ம் தேதி காலை 05.00 மணியளவில் வெளியே வந்து பார்த்தபோது வாகனமானது காணவில்லை என்றும்,மேற்படி இருசக்கர வாகனம் காணாமல் போனது தொடர்பாக பெட்டவாய்தலை காவல்நிலையத்தில் கடந்த 21.05.2025 தேதியன்று புகார் கொடுத்ததாகவும், வாகனத்தை திருடிய நபர் வேறு நம்பர் பிளேட்டினை பொறுத்தி இயக்கி வந்துள்ளதாகவும், காவல்துறை சோதனையில் மேற்படி

வாகனம் TN 48 BD 8103 என்ற பதிவெண் கொண்ட BAJAJ PULSAR 125 BS6 என்பது தெரியவந்ததாகவும், மேற்படி இரு சக்கர வாகனத்தை நாகப்பட்டின நகர காவல் நிலையத்தில் மீட்கப்பட்டு நிறுத்தி வைத்துள்ளதால் மனுதாரரின் சொந்த உபயோகத்திற்கு பயன்படுத்தி வந்ததாகவும், இருசக்கர வாகனம் காவல்நிலையத்தில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதால் மிகுந்த கஷ்டத்தில் இருப்பதாகவும் கூறியுள்ளார்.

2. மேற்படி வாகனம் தொடர்ந்து ஒரே இடத்தில் நிறுத்தி வைத்திருந்தால் சரியான பராமரிப்பு இல்லாமலும், வெயில், மழையில் நிறுத்தி வைக்கப்பட்டால் இதனால் தனக்கு பெருத்த கஷ்டமும், நஷ்டமும் ஏற்படும் என்றும், ஆகவே மேற்படி வாகனத்தை இவ்வழக்கு முடியும் முன்பாக இடைக்காலமாக தன்வசம் ஒப்படைக்கும்படி வேண்டுவதாகவும், மேற்படி வாகனத்தினை இடைக்கால பொறுப்பில் ஒப்படைக்கும் பட்சத்தில், அதனை விற்கவோ, அடமானம் வைக்கவோ, உருமாற்றம் செய்யவோ மாட்டேன் என்று கேட்டு மனுதாரர் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்.

3. எதிர்மனுதாரர்/குற்றமுறையிடுபவர் தரப்பில் இவ்வழக்கின் கைப்பற்றப்பட்ட இருசக்கர வாகனத்தை நீதிமன்ற சொத்தாக ஆக்கப்பட்டு (C.P. No.40/2026) வாகனத்தை உரிமையாளரிடம் ஒப்படைக்க ஆட்சேபனை இல்லை என தெரிவிக்கப்பட்டது.

4. இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன.

5. இவ்வழக்கில் மனுதாரருக்கு சொந்தமான TN 48 BD 8103 என்ற பதிவெண் கொண்ட BAJAJ PULSAR 125 BS6 என்ற இருசக்கர வாகனத்தை எதிர்மனுதாரர் கைப்பற்றி நிலுவையில் உள்ள இவ்வழக்கின் தொடர்புடைய இருசக்கர வாகனமானது தொடர்ந்து மழையிலும், வெயிலிலும் நின்றிருந்தால் பழுதாக கூடும் என்பதாலும் மற்றும் காவல் நிலையத்தாரால் கைப்பற்றப்பட்ட வாகனமானது மனுதாரரின் அன்றாட பயன்பாட்டிற்கும் பயன்படுத்தி கொள்வதற்கும், மேற்படி வழக்கு சொத்தை இடைக்கால பொறுப்பில் கொடுத்தால் அதனை விற்கவோ, அடமானம் வைக்கவோ, உருமாற்றம் செய்யவோ மாட்டேன் என்றும், நீதிமன்றம் கோரும் போது நீதிமன்றத்தில் ஒப்படைப்பதாகவும் கூறியுள்ளதை கருத்தில் கொண்டும், வழக்கின் தன்மை மற்றும் சூழ்நிலைகளை கருத்தில் கொண்டும் மனுதாரருக்கு கீழ்கண்ட நிபந்தனைகளின் பேரில் வழக்கு சொத்தை மனுதாரர் வசம் இடைக்காலமாக

ஒப்படைக்க நீதிமன்றம் உத்தரவிடுகிறது.

1. மனுதாரருக்கு வழக்கு சொத்தை பொறுத்து ரூ.50,000/—த்திற்கான சொந்த பிணைப்பத்திரம் மற்றும் மற்றும் தனிநபர் ஒருவர் அதே தொகைக்கு பிணைப்பத்திரமும் எழுதி தரவேண்டும் என்றும்,

2. மனுதாரர் மேற்படி வழக்கு சொத்தை விற்பனையோ அல்லது உருமாற்றம் செய்யவோ, நிறமாற்றம் செய்யவோ கூடாது என்றும்,

3. மனுதாரர் வழக்கு சொத்தை இரண்டு புகைப்படம் எடுத்து நீதிமன்றத்தில் ஒப்படைக்க வேண்டும் என்றும்,

4. மனுதாரர் வழக்கு சொத்துக்குண்டான அசல் ஆர்.சி புத்தகம் மற்றும் ஆதார் கார்டு ஜெராக்ஸ் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய வேண்டும் என்றும்,

5 மனுதாரர் வழக்கு சொத்தை இந்நீதிமன்றம் கேட்கும்போதோ, விசாரணை காலத்தில் விசாரணையின்போதோ, அவசியம் என கருதும் நேரங்களில் ஒப்படைக்க வேண்டும் என்றும்,

6 தலைமை எழுத்தர் மூலம் பஞ்சநாமா தயார் செய்யவும்,

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு இன்று 2026—ம் ஆண்டு ஜூன் மாதம் 09 நாள் என்னால் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறியப்பகரப்பட்டது.

JAYANDRAN ANNSRAJA

Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2026.06.09 11:47:57 +0530

நீதித்துறை நடுவர் எண்.1
நாகப்பட்டினம் (மு.கூ.பொ)